# அலகு – 3

# TT0203 இலக்கியப் பாடுபொருள்

## இந்த அலகு என்ன சொல்கிறது?

தமிழின் அடிப்படை இலக்கணமான ஐந்திலக்கணங்களில் அகம், புறம், யாப்பு, அணி முதலானவற்றை இவ்வலகில் காணலாம். அகப்பொருளின் ஐந்திணைகள், அவற்றின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருளையும், மறவர்களின் வீரம், போர், தூது, வெற்றி, கொடை, நிலையாமை முதலானவற்றை எடுத்துரைக்கும் புறப்பொருள் இலக்கணத்தையும், அதன் பன்னிரெண்டு திணைகளையும், செய்யுளை இயற்றுவதற்குரிய யாப்பு இலக்கணத்தையும், அதன் உறுப்புகளையும், செய்யுள்களில் உள்ள அழகுகளைப் பற்றிக் கூறும் அணி இலக்கணத்தையும் இவ்வலகில் எடுத்துரைக்கப்படவுள்ளன.

## இந்த அலகைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- அகப்பொருள் திணைகளை அறிந்துகொள்ளலாம்.
- புறப்பொருள் திணைகளை புரிந்து கொள்ளலாம்.
- தொல்காப்பியரின் மரபுப்பெயர்களை அறிந்துகொள்ளலாம்.
- யாப்பிலக்கண பாவகைகளைத் தெரிந்துகொள்ளலாம்.
- அணியிலக்கண அழகை அறிந்துகொள்ளலாம்.

## பாட அமைப்பு

| | பாட அமைப்பு |
|---|---|
| **3.0** | **பாட முன்னுரை** |
| **3.1** | **அகத்திணை** |
| 3.1.1 | முதற்பொருள் |
| 3.1.2 | கருப்பொருள் |
| 3.1.3 | உரிப்பொருள் |
| **3.2** | **புறத்திணை** |
| 3.2.1 | வெட்சித் திணை |
| 3.2.2 | கரந்தைத் திணை |
| 3.2.3 | வஞ்சித் திணை |
| 3.2.4 | காஞ்சித் திணை |
| 3.2.5 | உழிஞைத் திணை |
| 3.2.6 | நொச்சித் திணை |
| 3.2.7 | தும்பைத் திணை |
| 3.2.8 | வாகைத் திணை |
| 3.2.9 | பாடாண் திணை |
| 3.2.10 | பொதுவியல் திணை |
| 3.2.11 | கைக்கிளைத் திணை |
| 3.2.12 | பெருந்திணை |
| | **தன் மதிப்பீடு : வினாக்கள் – I** |
| **3.3** | **யாப்பு** |
| 3.3.1 | எழுத்து |
| 3.3.2 | அசை |
| 3.3.3 | சீர் |
| 3.3.4 | தளை |
| 3.3.5 | அடி |
| 3.3.6 | தொடை |
| 3.3.7 | பா வகைகள் |
| **3.4** | **அணி** |
| 3.4.1 | உவமையணி |
| 3.4.2 | எடுத்துக்காட்டு உவமையணி |
| 3.4.3 | இல்பொருள் உவமையணி |

| | பாட அமைப்பு |
|---|---|
| 3.4.4 | உருவக அணி |
| 3.4.5 | ஏகதேச உருவகஅணி |
| 3.4.6 | இயல்பு நவிற்சி அணி |
| 3.4.7 | உயர்வுநவிற்சியணி |
| 3.4.8 | வேற்றுமையணி |
| 3.4.9 | இரட்டுறமொழிதலணி (இரண்டு + உற + மொழிதல் + அணி) |
| 3.4.10 | பிறிதுமொழிதலணி |
| 3.4.11 | நிரல்நிறையணி |
| 3.4.12 | வேற்றுமைப்பொருள்வைப்பு அணி |
| 3.4.13 | தற்குறிப்பேற்றணி (தன் + குறிப்பு + ஏற்றம் = தற்குறிப்பேற்றம்) |
| 3.4.14 | வஞ்சப்புகழ்ச்சியணி |
| 3.4.15 | பின்வருநிலையணி |
| **3.5** | **சொல்லாட்சிப் பிறழ்வுகள்** |
| 3.5.1 | பொருந்தாச் சொல்லாட்சி |
| 3.5.2 | வேற்றுச் சொல்லாட்சி |
| **3.6** | **தொகுப்புரை** |
| | தன் மதிப்பீடு : வினாக்கள் – II |

## 3.0 பாட முன்னுரை

### பாட முன்னுரை

தமிழின் அடிப்படை தமிழிலக்கணம் பற்றி அறிய அகத்திணை, புறத்திணை, யாப்பிலக்கணம், அணியிலக்கணம் ஆகியனவற்றை அறிவது அவசியமாகிறது. தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் "இலக்கியத்திற்கு இலக்கணம் இயம்பல் என்பதற்கிணங்க" எந்தப் பாடநூலையும் திறம்பட கற்பிக்கின்ற நெறிமுறையைப் பெற்றிருக்க வேண்டும்.

நம் தமிழ்ச் சான்றோர்கள் செய்யுளுள் அமையத் தகுந்த பொருள்களை அகப்பொருள், புறப்பொருள் என இரண்டு வகையாகப் பகுத்துள்ளனர். இவ்வலகில் **அகத்திணை, புறத்திணை, யாப்பு, அணியிலக்கணம்** ஆகியவற்றையும், இத்துடன் சொல்லாட்சிப் பிறழ்வுகளையும் கற்க உள்ளோம்.

## 3.1 அகத்திணை

### அகத்திணை

"அகம்" என்னும் சொல்லுக்கு "உள்ளம்" எனப் பொருள்படும் என்பதை அறிவீர்கள். ஆதலின், 'ஒத்த அன்புடைய தலைவன் தலைவியின் உள்ளத்தே தோன்றும் காதல் நிகழ்ச்சியை அகப்பொருள் எனப் பெயரிட்டு வழங்கினர். அகப்பொருள் பற்றி நிகழும் ஒழுக்கத்தை அகத்திணை என்பர். "திணை" என்பதற்கு "ஒழுக்கம்" எனப் பொருள்படும்.

அகத்திணையைக் **குறிஞ்சித் திணை, முல்லைத் திணை, மருதத் திணை, நெய்தல் திணை, பாலைத் திணை** என ஐந்து வகையாகப் பகுத்துக் கூறுவர். இவற்றையே அன்பின் ஐந்திணை என்பர்.

- **குறிஞ்சித் திணை**

ஒத்த அன்புடைய தலைவன் ஒருவனும் தலைவி ஒருத்தியும் தாமே ஒருவரை ஒருவர் கண்டு உள்ளம் கலந்து உறவுகொள்ளும் ஒழுக்கமாகும்.

- **முல்லைத் திணை**

பொருள் தேடுதல் அல்லது நாடு காவலுக்காகத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வரும்வரை, அவனது பிரிவை நினைத்துத் தலைவி தன் இல்லத்தில் வருந்தி இருக்கும் நிலையைக் குறிப்பதாகும்.

- **மருதத் திணை**

இல்வாழ்வில் ஈடுபட்ட தலைவன் ஆடல் பாடல்களில் விருப்பம் கொண்டு அவை காரணமாக வெளியிடங்களில் தங்கி மீளும்போது, தலைவி அவன்மீது கொள்ளும் ஊடல் உவகையைக் குறிப்பதாகும்.

- **நெய்தல் திணை**

பிரிந்து சென்ற தலைவன், குறித்த காலத்தில் வராமல் இருந்தால், அது குறித்துத் தலைவி கொள்ளும் வருத்தத்தைக் குறிக்கும் ஒழுக்கமாகும்.

- **பாலைத் திணை**

தலைவன் தலைவியை விட்டுப் பிரியும் ஒழுக்கமாகும்.

இவை ஐந்திணோடு **கைக்கிளை, பெருந்திணை** ஆகிய இரண்டையும் சேர்த்து அகத்திணை ஒழுக்கம் ஏழு எனக் கூறுவர்.

கைக்கிளை என்பது ஒருதலைக் காதல். பெருந்திணை என்பது பொருந்தாக் காதல். ஆதலின், அவை இரண்டும் சிறப்புடையனவாகா.

அன்பின் ஐந்திணை சிறப்புற நடத்தற் பொருட்டு ஒவ்வொன்றுக்கும் 'முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்' என மூன்று பொருள்கள் வகுத்துள்ளனர்.

### 3.1.1 முதற்பொருள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து வகை ஒழுக்கம் நிகழ்தற்குரிய நிலத்தையும் நிகழ்த்துவதற்கு ஏற்ற பொழுதையும் (காலம்) 'முதற்பொருள்' என வழங்குவர். (நிலமும் பொழுதும் பாலை எனப்படும்)

- **ஐவகை நிலம்**

| | | |
|---|---|---|
| 1. மலையும் மலை சார்ந்த இடமும் | – | குறிஞ்சி |
| 2. காடும் காடு சார்ந்த இடமும் | – | முல்லை |
| 3. வயலும் வயல் சார்ந்த இடமும் ஒன்றையொன்று அழுத்தமாக உரசுதல்) | – | மருதம் |
| 4. கடலும் கடல் சார்ந்த இடமும் | – | நெய்தல் |

5. பாலைக்குத் தனிநிலம் இல்லை. எனினும், தத்தம் இயல்பிற் திரிந்த முல்லையும் குறிஞ்சியும் சேர்ந்த பகுதி பாலை எனக் கூறப்படும். (மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை எனக் கூறுவர்).

அகப்பொருள் நிகழ்தற்கு ஏற்ற பொழுதைப் பெரும் பொழுது, சிறுபொழுது என இரண்டு வகையாகப் பிரிப்பர்.

- **பெரும்பொழுது**

பெரும்பொழுது என்பது ஓர் ஆண்டின் கூறுபாடு. ஓர் ஆண்டுக்குரிய ஆறு பருவங்களும் பெரும்பொழுது எனப்படும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு திங்கள் கால அளவினை உடையதாம்.

பெரும்பொழுது ஆறு வகைப்படும். அவற்றையும் அவற்றிற்குரிய திங்கள்களையும் இங்குக் காண்போம்.

| பெரும்பொழுது | உரிய திங்கள் |
|---|---|
| 1. இளவேனிற்காலம் | சித்திரை, வைகாசி |
| 2, முதுவேனிற்காலம் | ஆனி, ஆடி |
| 3. கார்காலம் | ஆவணி, புரட்டாசி |
| 4. குளிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை |
| 5. முன்பனிக்காலம் | மார்கழி, தை |
| 6. பின்பனிக்காலம் | மாசி, பங்குனி |

(வேனிற்காலம் – வெயிற்காலம், கார்காலம் – மழைக்காலம், முன்பனிக்காலம் – மாலைக்குப் பின் பனி விழும் காலம், பின்பனிக்காலம் – காலையில் பனி விழும் காலம்)

• சிறுபொழுது

சிறுபொழுதென்பது ஒரு நாளின் கூறுபாடு. ஒரு நாளை 1. வைகறை, 2. காலை, 3. நண்பகல், 4. எற்பாடு, 5. மாலை, 6. யாமம் என ஆறு கூறுகளாக்கி அவற்றைச் சிறுபொழுது என வழங்குவர்.

1. வைகறை – இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை
2. காலை – காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை
3. நண்பகல் – ஊடலும் ஊடல் நிமித்தமும்
4. எற்பாடு – பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை
5. மாலை – மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
6. யாமம் – இரவு 10 மணி முதல் நள்ளிரவு 2 மணி வரை

ஒவ்வொரு சிறுபொழுதும் நான்கு மணி நேரம் கொண்டது. எனவே, ஆறு சிறுபொழுதும் சேர்ந்து இருபத்து நான்கு மணி நேரமாகும்.

ஐந்து நிலங்களுக்கும் உரிய பெரும்பொழுதுகளும் சிறுபொழுதுகளும் பின்வருமாறு அமையும்.

| நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | குளிர்காலமும் முன்பனிக்காலமும் | யாமம் |
| முல்லை | கார்காலம் | மாலை |
| மருதம் | பெரும்பொழுதுகள் ஆறும் | வைகறை |
| நெய்தல் | பெரும்பொழுதுகள் ஆறும் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில், பின்பனி | நண்பகல் |

### 3.1.2 கருப்பொருள்

இதுவரை கண்ட ஐவகை நிலங்களுக்கும் உரிய தெய்வம், மக்கள், பறவை, விலங்குகள், ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் ஆகியவற்றைக் கருப்பொருள் என வழங்குவர்.

ஒவ்வொரு திணைக்கும் உரிய கருப்பொருளைப் பின்வருமாறு காண்போம்.

## ஐந்திணைக்களுக்குரிய கருப்பொருள் அட்டவணை

| வ. எண் | கருப்பொருள்கள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 1. | தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| 2. | மக்கள் | சிலம்பன், வெற்பன், கானவர், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | மகிழ்னன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| 3. | உணவு | மலை நெல், திணை, மூங்கிலரிசி | வரகு, சாமை | செந்நெல், அரிசி | மீன், உப்பு விற்றலால் வரும் பொருள் | வழியில் பறித்த பொருள் |
| 4. | விலங்கு | புலி, கரடி, யானை, சிங்கம் | முயல், மான் | எருமை, நீர் நாய் | சுறா, முதலை | செந்நாய், புலி |
| 5. | பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, பிடவம் | தாமரை, குவளை | தாழம்பூ, நெய்தற் பூ | மராம் பூ, பாதிரிப் பூ |
| 6. | மரம் | அகில், தேக்கு, சந்தனம், மூங்கில் | கொன்றை, காயா | மருதம், வஞ்சி | புன்னை, தாழை | இருப்பை, ஓமை, உழிஞை |
| 7. | பறவை | கிளி, மயில் | காட்டுக் கோழி, மயில் | நாரை, அன்னம், தாரா | அன்னம், கடற்காகம் | கழுகு, பருந்து, புறா |
| 8. | ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| 9. | நீர் | அருவிநீர், சுனைநீர் | காட்டாற்று நீர் | மனைக் கிணறு, ஆறு | கேணி | நீர் வற்றிய கிணறு, சுனை |
| 10. | பறை | தொண்டகப் பறை | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரிகிணை | மீன் கோட்பறை, பம்பை | போர்ப்பறை, ஊர் எறி பறை |
| 11. | யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருதயாழ் | விளரியாழ் | பாலையாழ் |

| வ. எ ண் | கருப்பொருள் கள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|---|
| 12. | பண் | குறிஞ்சிப் பண் | சதாரிப் பண் | மருதப் பண் | செவ்வழிப் பண் | பஞ்சுரம் |
| 13. | தொழில் | தேனெடுத் தல் கிழங்கு அகழ்தல் | சாமை விதைத்தல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், வைக்கோல் துவைப்பித்த ல் புதுநீராடல் | மீன்பிடித்த ல், உப்பு விளைத்த ல், உப்பு விற்றல் | போர் செய்தல், சூறையாடு தல் |

### 3.1.3 உரிப்பொருள்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய திணைகளுக்கு உரிய பொருள் உரிப்பொருள் எனப்படும். இங்கு உரிப்பொருள்கள் மற்றும் உரிப்பொருள்களின் நிமித்தங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

குறிஞ்சி – புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
முல்லை – இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
மருதம் – ஊடலும் ஊடல் நிமித்தமும்
நெய்தல் – இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
பாலை – பிரிதலும் பிரிதல் நிமித்தமும்

என ஐந்து திணைகளுக்கும் உரிப்பொருள்கள் வகுக்கப்பட்டுள்ளன.

## 3.2 புறத்திணை

### புறத்திணை

ஒத்த அன்புடைய தலைவன் தலைவியால் மட்டும் அன்றி யாவராலும் துய்க்கப்பெற்று, பிறருக்கும் கூறப்படும் தன்மை வாய்ந்த பொருள் 'புறப்பொருள்' எனப்படும். அஃது அறமும் பொருளும், அவற்றின் நிலையின்மையும், வீடுபேறும் பற்றிக் கூறுவதாகும்.

இப்புறப்பொருள் 1. வெட்சித் திணை, 2. கரந்தைத் திணை, 3. வஞ்சித் திணை, 4. காஞ்சித் திணை, 5. நொச்சித் திணை, 6. உழிஞைத் திணை, 7. தும்பைத் திணை, 8. வாகைத் திணை, 9. பாடாண் திணை, 10. பொதுவியல்

திணை, 11. கைக்கிளை, 12. பெருந்திணை எனப் பன்னிரண்டு திணைகளாக வகுக்கப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழர் மறத்திலும் அறம் கண்ட பாங்கினை இத்திணைகளால் அறியலாம். இனி, திணைகளின் விளக்கங்களைக் காண்போம்.

### 3.2.1 வெட்சித் திணை

பண்டைக் காலத்தில், பகை நாட்டின் மீது போர் தொடுக்க விரும்பும் ஓர் அரசன், பகை நாட்டுப் பசுக்கள் போரில் இறந்துவிடாமல் தடுக்கத் தன் வீரர்களை அனுப்பி அவற்றைக் கவர்ந்துவரச் செய்வான். அவ்வாறு பசுக்களைக் கவர்ந்துவரச் செல்லும் வீரர்கள் வெட்சிப் பூவை அணிந்து செல்வர். இது வெட்சித் திணை எனப்படும்.

### 3.2.2 கரந்தைத் திணை

வெட்சி சூடிய வீரர்கள் கவர்ந்து செல்லும் பசுக்கூட்டங்களை மீட்கும் பொருட்டுக் கரந்தைப் பூச்சூடிய வீரர்கள் போரிட்டு பசுக் கூட்டங்களை மீட்பது கரந்தைத் திணை எனப்படும்.

### 3.2.3 வஞ்சித் திணை

அரசன் ஒருவன், பகையரசனுடைய நாட்டைக் கைப்பற்ற நினைந்து வஞ்சிப்பூச்சூடி, அவன் மேல் போருக்குச் செல்லுவது வஞ்சித் திணை எனப்படும்.

### 3.2.4 காஞ்சித் திணை

மண்ணாசை கொண்டு போர் தொடுத்த பகைவர் படையைத் தன்னாட்டு எல்லைக்குள் புகாதவாறு காஞ்சிப் பூச்சூடிய வீரர்கள் எதிர் நின்று தடுப்பது காஞ்சித் திணை எனப்படும்.

### 3.2.5 உழிஞைத் திணை

உழிஞைப் பூச்சூடிய வீரர்கள் பகை அரசனின் மதிலை வளைத்துக் கொள்வது உழிஞைத் திணை எனப்படும்.

### 3.2.6 நொச்சித் திணை

மதிலை வளைத்துக் கொண்ட பகைவர்கள் உள்ளே புகாதவாறு தடுத்துக்காக்க. நொச்சிப் பூச்சூடிய வீரர்கள் போர் புரிவது நொச்சித் திணை எனப்படும்.

### 3.2.7 தும்பைத் திணை

பகைகொண்ட இரண்டு அரசர்கள் தத்தம் படையுடன் தும்பைப்பூ அணிந்து, எதிர்நின்று போர் புரிவது தும்பைத் திணை எனப்படும்.

### 3.2.8 வாகைத் திணை

போரில் வெற்றி பெற்ற அரசன் வாகைப்பூச்சூடி மகிழ்வது வாகைத் திணை எனப்படும்.

### 3.2.9 பாடாண் திணை

அரசனுடைய புகழ், கொடை, வலிமை, வீரம் முதலிய பண்புகளைப் புகழ்ந்து பாடுவது பாடான் திணை எனப்படும் (பாடு + ஆண் + திணை எனப் பிரிந்து, பாடப்படும் ஆண் மகனின் ஒழுகலாறுகளைப் புகழ்வது எனப் பொருள் தரும்).

### 3.2.10 பொதுவியல் திணை

இதுவரை கூறப்பட்ட புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாக உள்ளனவும், அவற்றிற் கூறாது ஒழிந்தனவுமாகிய சில செய்திகளைத் தொகுத்துக் கூறுவதாகும்.

### 3.2.11 கைக்கிளைத் திணை

தலைவன் தலைவியருள் ஒருவரிடத்து மட்டுமே தோன்றுகின்ற ஒருதலைக் காதல், இஃது ஆண்பாற் கூற்றுக் கைக்கிளை, பெண்பாற் கூற்றுக் கைக்கிளை என இருவகைப்படும்.

### 3.2.12 பெருந்திணை

பொருந்தாக் காதல், இது பெண்பாற் கூற்றுப் பெருந்திணை, இருபாற் கூற்றுப் பெருந்திணை என இருவகைப்படும்.

இத்தகைய புறப்பொருள் செய்திகளை, 'ஐயனாரிதனார்' என்னும் தண்டமிழ்ப் புலவர் யாத்த 'புறப்பொருள் வெண்பா மாலை' என்னும் இலக்கண நூலில் விரிவாகக் காணலாம்.

| தன் மதிப்பீடு : வினாக்கள் – I |
| --- |
| 1. அகத்திணையின் வகைகள் யாவை? |
| 2. ஐவகை நிலங்களைப் பற்றி குறிப்பு வரைக. |
| 3. ஐந்திணைக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுதுகள் யாவை? |
| 4. மருதத்திணைக்குரிய கருப்பொருள்கள் யாவை? |
| 5. ஐந்திணைக்குரிய உரிப்பொருள்கள் யாவை? |
| 6. புறத்திணைகள் எத்தனை? அவை யாவை? |
| 7. வஞ்சித் திணை என்றால் என்ன? |
| 8. வாகைத் திணை என்றால் என்ன? |
| 9. தும்பைத் திணை என்றால் என்ன? |
| 10. பொதுவியல் திணை என்றால் என்ன? |

## 3.3 யாப்பு

#### யாப்பு

தமிழ் இலக்கணத்தில் செய்யுள் இலக்கணத்தை யாப்பிலக்கணம் என்பர். யாத்தல் என்னும் சொல்லிற்குக் கட்டுதல் எனப் பொருள்படும். ஒரு சிறந்த கருத்தை உணர்ச்சி பொங்க கற்பனையோடு இலக்கணம் வழுவாத ஒரு வடிவத்தில் படைப்பதே, செய்யுள் ஆகும். இத்தகைய செய்யுளை இயற்றப் பயன்படும் உறுப்புகள் செய்யுள் உறுப்புகள், எனப்படும். அவை எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்புகளாகும்.

### 3.3.1 எழுத்து – 247

செய்யுள் இயற்றுவதற்கு அடிப்படையாக இருப்பவை எழுத்துகளாகும். அவை

| | | |
|---|---|---|
| உயிர் | – | 12 |
| மெய் | – | 18 |
| உயிர்மெய் | – | 216 |
| ஆய்தம் | – | 1 |
| | | ---- |
| | | 247 |
| | | ---- |

ஒவ்வோர் எழுத்திற்கும் ஒலியளவு உள்ளது.

குறிப்பு : எழுத்துகளைப்பற்றி விரிவாக அலகு – 1ல் விவரிக்கப்பட்டுள்ளதால் இங்கு எண்ணிக்கை மட்டும் பொடுக்கப்பட்டுள்ளது.

### 3.3.2 அசை

**எழுத்து அசைத்து இசை கோடலின் அசையே**

**(யாப்பருங்கலம் விருத்தி – சூ,2)**

எழுத்துத் தனித்தோ பல சேர்ந்தோ ஓசையுண்டாகுமாறு பிரிந்து நிற்பது அசை எனப்படும். இது சீருக்கு உறுப்பாகும். பல அசைகள் சேர்ந்தே சொல்லும் சீருமாகின்றன. 'எண்ணெனன்ப' – இச்சீரில் மூன்று அசைகள் உள்ளன. அவை : எண் – ணென் – ப. அதாவது, மூன்று அளவு ஒலிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஓர் அசையாகும். இவ்வசை இரண்டு வகைப்படும். அவை : 1. நேரசை 2. நிரையசை.

| | | | |
|---|---|---|---|
| நேரசை : | 1. குறில் தனித்து வரல் | – | க |
| | 2. குறில் ஒற்றடுத்து வரல் | – | கல் |
| | 3. நெடில் தனித்து வரல் | – | கா |
| | 4. நெடில் ஒற்றடுத்து வரல் | – | கால் |
| நிரையசை : | 1. குறில் இணைந்து வரல் | – | படு |
| | 2. குறில் இணைந்து ஒற்றடுத்து வரல் | – | படும் |
| | 3. குறில் நெடில் இணைந்து வரல் | – | கடா |
| | 4. குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரல் | – | கடாம் |

நேரசை ஐந்தெழுத்துக்கு மிகாமலும் நிரையசை ஆறெழுத்துக்கு மிகாமலும் இருக்கும். எழுத்துகளைக் கணக்கிடும்பொழுது மெய்யெழுத்துகளை நீக்கியே கணக்கிடவேண்டும்.

### 3.3.3 சீர்

சீர் என்னும் சொல்லுக்கு இனிய ஒலி என்று பொருள். "அசையியைந்து சீர்கொள நிற்றலின் சீரே" (யாப்பருங்கலம்). அசை ஒன்றோ பலவோ கூடிப் பகுதி பகுதியாகச் சீரான முறையில் அடிக்கு உறுப்பாக அமைவதாகும். ஓரசைச்சீர், ஈரசைச்சீர், (மாச்சீர், விளச்சீர்), மூவகைச்சீர் (காய்ச்சீர், கனிச்சீர்), நாலசைச்சீர் (பொதுச்சீர்) எனச் சீர்கள் அசையளவு பொருத்துப் பெயர் பெறும்.

- **ஓரசைச் சீர்**

நேரசையோ நிரையசையோ தனியாக நின்று, ஒரு சீராக வருவது ஓரசைச்சீர் எனப்படும். இது வெண்பாவின் ஈற்றடியில் இறுதிச் சீராக வரும். பாடலில் வேறெங்கும் வராது. வரவும் கூடாது.

| அசை | – | வாய்பாடு |
|---|---|---|
| நேர் | – | நாள் |
| நிரை | – | மலர் |

- **ஈரசைச் சீர்**

ஈரசைகள் சேர்ந்து ஒரு சீராக அமைவது ஈரசைச்சீர் எனப்படும். நேரசையும் நிரையசையும் தம்முள் இணைந்தும் மாறியும் ஈரசைகளாக வரும். நேர் அசையில் முடிவது இரண்டும், நிரை அசையில் முடிவது இரண்டுமாக ஈரசைச் சீர்கள் நான்காகும். நேர் அசையில் முடிவதனை மாச்சீர் எனவும், நிரையில் முடிவதனை விளச்சீர் எனவும் கூறுவர். ஈரசைச் சீரினை இயற்சீர் அல்லது ஆசிரிய உரிச்சீர் எனவும் அழைப்பர்.

| அசை | – | வாய்பாடு (சீர்) | |
|---|---|---|---|
| நேர் நேர் | – | தேமா | |
| நிரை நேர் | – | புளிமா | மாச்சீர் இயற்சீர் |
| நிரை நிரை | – | கருவிளம் | அல்லது |
| நேர் நிரை | – | கூவிளம் | விளச்சீர் ஆசிரிய உரிச்சீர் |

- **மூவசைச் சீர்**

ஈரசைச்சீர் நான்கின் இறுதியிலும் நேரசையும் நிரையசையும் தனித்தனியாகக் கூடி வருதலாகிய எட்டும் மூவசைச் சீர்களாம்.

| | | | |
|---|---|---|---|
| அசை | – | வாய்பாடு (சீர்) | |
| நேர் நேர் நேர் | – | தே மாங் காய் | |
| நிரை நேர் நேர் | – | புளி மாங் காய் | |
| நிரை நிரை நேர் | – | கரு விளங் காய் | |
| நேர் நிரை நேர் | – | கூவி ளங் காய் | காய்ச் சீர்கள் |
| நேர் நேர் நிரை | – | தே மாங் கனி | |
| நிரை நேர் நிரை | – | புளி மாங் கனி | |
| நிரை நிரை நிரை | – | கரு விளங் கனி | |
| நேர் நிரை நிரை | – | கூவி ளங் கனி | கனிச் சீர்கள் |

இவையெட்டும் உரிச்சீர் எனவும் பெறும். இவற்றுள் காய்ச்சீர்கள் வெண்சீர் எனவும், கனிச்சீர்கள் வஞ்சிச்சீர் எனவும் கூறப்பெறும்.

- **நாலசைச் சீர்**

மூவசைச் சீர் எட்டின் இறுதியிலும் நேர், நிரை அசை சேர, வரும் பதினாறும் நாலசைச் சீர் எனக் கூறப்படும்.

| | | |
|---|---|---|
| அசை | – | வாய்பாடு |
| நேர் நேர் நேர் நேர் | – | தே மாந் தண் பூ |
| நிரை நேர் நேர் நேர் | – | புளி மாந் தண் பூ |
| நிரை நிரை நேர் நேர் | – | கரு விளந் தண் பூ |
| நேர் நிரை நேர் நேர் | – | கூவி ளந் தண் பூ |
| | | |
| நேர் நேர் நிரை நேர் | – | தே மா நறும் பூ |
| நிரை நேர் நிரை நேர் | – | புளி மா நறும் பூ |
| நிரை நிரை நிரை நேர் | – | கரு விள நறும் பூ |
| நேர் நிரை நிரை நேர் | – | கூவி ள நறும் பூ |
| | | |
| நேர் நேர் நேர் நிரை | – | தே மாந் தண் நிழல் |
| நிரை நேர் நேர் நிரை | – | புளி மாந் தண் நிழல் |
| நிரை நிரை நேர் நிரை | – | கரு விளந் தண் நிழல் |

நேர் நிரை நேர் நிரை – கூ விளந் தண் நிழல்

நேர் நேர் நிரை நிரை – தே மா நறு நிழல்
நிரை நேர் நிரை நிரை – புளி மா நறு நிழல்
நிரை நிரை நிரை நிரை – கரு விள நறு நிழல்
நேர் நிரை நிரை நிரை – கூ விள நறு நிழல்

குறிப்பு : ஓரசை, ஈரசை, மூவசை, நாலசைச் சீர்களுக்கான அசைகளும், வாய்பாட்டுக்கான அசைகளும் பொருந்தி வருவதைக் காண்க.

### 3.3.4 தளை

சீர்கள் பொருத்தமாக இயைந்து வருவது தளை எனப்படும். இத்தளைகள் ஏழு வகைப்படும். அவை,

1. நேரொன்றாசிரியத்தளை
2. நிரையொன்றாசிரியத்தளை
3. இயற்சீர்வெண்டளை
4. வெண்சீர் வெண்டளை
5. கலித் தளை
6. ஒன்றிய வஞ்சித்தளை
7. ஒன்றாதவஞ்சித்தளை

என்பனவாகும்.

தளைகள் பற்றிய சிறு விளக்கத்தை இங்குக் காண்போம்.

- **நேரொன்றாசிரியத்தளை**

தேமா, புளிமா என்னும் மாச்சீர்கள் நின்ற சீர்களாய் நிற்க, அவற்றின் முன் வரும் சீரின் முதலசை நேரசையாக வந்து ஒன்றுவது நேரொன்றாசிரியத்தளை ஆகும்.

- **நிரையொன்றாசிரியத்தளை**

கூவிளம், கருவிளம் என்னும் விளச்சீர்கள் நின்றசீர்களாய் நிற்க, அவற்றின் முன் வரும் சீரின் முதல் அசை, நிரையசையாக வந்து ஒன்றுவது, நிரையொன்றாசிரியத்தளை எனப்படும்.

- **இயற்சீர் வெண்டளை**

ஈரசைச்சீர்களில், மாச்சீர்களுக்கு முன் நிரையசையும், விளச்சீர்களுக்குமுன், நேரசையும் வருமாயின், அவை, இயற்சீர் வெண்டளையாகும்.

- **வெண்சீர் வெண்டளை**

மூவகைச்சீர்களுள், காய் என முடியும் சீர்களுக்கு முன் நேர் அசை வந்து ஒன்றுவது வெண்சீர் வெண்டளை ஆகும்.

- **கலித்தளை**

மூவகைச்சீர்களில், காய் என முடியும் சீர்களுக்கு முன், நிரை வந்து, ஒன்றாமல் இயைவது கலித்தளை ஆகும்.

- **ஒன்றியவஞ்சித்தளை**

கனிச்சீர்முன், நிரை வந்து ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளை எனப்படும்.

- **ஒன்றாதவஞ்சித்தளை**

கனிச்சீர்முன் நேர் வந்து ஒன்றாமையால் அது ஒன்றாத வஞ்சித் தளையாகும்.

### 3.3.5 அடி

சீர்கள் பல, அடுத்து வருவது அடி எனப்படும். அஃது ஐந்து வகைப்படும். அவை,

1. குறளடி
2. சிந்தடி
3. நேரடி (அளவடி)
4. நெடிலடி
5. கழிநெடிலடி

என்பனவாம்.

| சீர் | அடி |
|---|---|
| இரண்டு சீர்களை உடையது | குறளடி |
| மூன்று சீர்களை உடையது | சிந்தடி |
| நான்கு சீர்களை உடையது | நேரடி (அளவடி என்றும் பெயர்) |
| ஐந்து சீர்களை உடையது | நெடிலடி |
| ஆறுசீர்களை உடையது | கழிநெடிலடி |

- **செய்யுள் அலகிடும் முறை**

**மரத்தில் நீயும் ஏறிடுவாய்**
**மாங்காய் தன்னைப் பறித்திடுவாய்**
**உரத்த குரலில் தமிழ்ப்பாட்டை**
**உலகம் உணர உரைத்திடுவாய்**

| | | |
|---|---|---|
| மரத்/தில் | நீ/யும் | ஏ/றிடு/வாய் |
| நிரை / நேர் | நேர் / நேர் | நேர் / நிரை / நேர் |
| புளிமா | தேமா | கூவிளங்காய் |
| மாங் / காய் நேர் / நேர் | தன் / னைப் நேர் / நேர் | பறித் / திடு / வாய் நிரை / நிரை / நேர் |
| தேமா | தேமா | கருவிளங்காய் |
| உரத் / த நிரை / நேர் | குர / லில் நிரை / நேர் | தமிழ்ப் / பாட் / டை நிரை / நேர் / நேர் |
| புளிமா | புளிமா | புளிமாங்காய் |
| உல / கம் நிரை / நேர் | உண / ர நிரை / நேர் | உரைத் / திடு / வாய் நிரை / நிரை / நேர் |
| புளிமா | புளிமா | கருவிளங்காய் |

### 3.3.6 தொடை

பல அடிகளிலோ, பல சீர்களிலோ, எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது தொடை எனப்படும். "தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்" என்பது நம்முன்னோர் மொழி.

அவ்வளவு வளமானது நம் செய்யுளியல். ஆனால், நாம் தொடைகள் சிலவற்றைப் பற்றி மட்டும் ஈண்டுக் காண்போம்.

| வரிசை எண். | தொடை |
|---|---|
| 1. | மோனைத்தொடை |
| 2. | எதுகைத்தொடை |
| 3. | முரண் தொடை |
| 4. | இயைபுத்தொடை |
| 5. | அளபெடைத்தொடை |

ஐந்து வகையான முதற் தொடைகளைத் தழுவி, எட்டு வகையான உறழ்ச்சித் தொடைகள் தோன்றும். எனவே, தொடைகள் 5 x 8 = 40 ஆகும். இவற்றுடன் இரட்டைத் தொடை, அந்தாதித் தொடை, செந்தொடை இம்மூன்றையும் சேர்க்க, தொடைகளின் மொத்த எண்ணிக்கை 43 ஆகும்.

- **மோனைத்தொடை**

முதல் எழுத்து ஒன்றேபோல் வரத்தொடுப்பது மோனைத் தொடை எனப்படும்.

**செ**ல்வத்துட் **செ**ல்வம் **செ**விச்செல்வம் அச்செல்வம்
**செ**ல்வத்துள் எல்லாம் தலை.

இக்குறட்பாவில், ஓரடியின் முதற்சீரில் நின்ற முதல் எழுத்து (செ), அவ்வடியின் ஏனைய சீர்கள் பலவற்றுள் முதலில் வந்துள்ளது.

அந்த முதல் எழுத்துக்கு இன எழுத்து வந்தாலும் அதுவும் மோனை எனப்படும். அதனை இணைமோனை என்பர்.

**உயிர்க்கு இனமாக வருவன**

| | | |
|---|---|---|
| 1. | அ, ஆ | ஐ, ஔ |
| 2. | இ, ஈ | எ, ஏ |
| 3. | உ, ஊ | ஒ, ஓ |

**உயிர்மெய்க்கு இனமாவன**

1. ஞ, ந
2. ம, வ
3. த,ச

இவையும் ஒன்றுக்கு ஒன்று மோனையாக வரும்.

மோனை, எட்டு வகைப்படும். அவை,

1. அடிமோனை
2. இணைமோனை
3. பொழிப்பு மோனை
4. ஒரூஉ மோனை
5. கூழை மோனை
6. மேற்கதுவாய் மோனை
7. கீழ்க்கதுவாய் மோனை
8. முற்றுமோனை

- **எதுகைத்தொடை**

ஒரு செய்யுளில் உள்ள அடிகளிலும், சீர்களிலும் முதல் எழுத்து அளவொத்திருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும். இதுவும் எட்டு வகைப்படும்.

எ.கா.

"ம**ல**ர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நி**ல**மிசை நீடுவாழ் வார். " – குறள்: 03)

- **முரண்தொடை**

அடிதோறும், முதற்சீர் முரண்படத் தொடுப்பது அடிமுரண் தொடையாம்.

**எ.கா :**

**இன்பம்** விழையான் இடும்பை இயல்பென்பான்
**துன்பம்** உறுதல் இலன்.

இக் குறட்பாவில், முதலடியில் இன்பம் எனவும் இரண்டாம் அடியில் துன்பம் எனவும் முரண்பட்ட சொற்கள் வந்துள்ளன. இவ்வாறு வருவது முரண்தொடை.

- **இயைபுத் தொடை**

அடிதோறும், இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை.

**எ.கா :**

செந்தமிழ் நாடென்னும் **போதினிலே** – இன்பத்
தேன்வந்து பாயுது **காதினிலே** ! – எங்கள்
தந்தையர் நாடென்ற **பேச்சினிலே** – ஒரு
சக்தி பிறக்குது **மூச்சினிலே** !

இப்பாடல் அடிகளில் இறுதிச்சீர்கள், போதினிலே, காதினிலே, பேச்சினிலே, மூச்சினிலே என ஒன்றிவந்துள்ளதால் இஃது அடிஇயைபுத் தொடை.

- **அளபெடைத் தொடை**

அடிதோறும், முதல் சீர் அளபெடுத்து வருவது, அளபெடைத் தொடையாகும்.

**எ.கா :**

கெடுப்ப**தூஉ**ம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்ப**தூஉ**ம் எல்லாம் மழை.

இக்குறட்பாவில், கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என, இரண்டடிகளிலும் அளபெடுத்து வந்துள்ளமையால் இஃது அளபெடைத் தொடை.

### 3.3.7 பா வகைகள்

கவிதையைச் செய்யுள், யாப்பு, பா, பாட்டு எனப் பல பெயர்களால் குறிப்பர். உரைநடையில் கையாளப்படும் சொற்களுக்கும் கவிதையில் கையாளப்படும் சொற்களுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. ஆயினும், அச்சொற்களைக் கையாளும் முறையில் தான் வேறுபாடுகள் உள்ளன.

செய்யுளில் சொற்கள் இடத்திற்கு ஏற்றவாறும் சூழ்நிலைக்கு ஏற்றவாறும், உணர்ச்சிக்கு ஏற்றவாறும், சுவைக்கு ஏற்றவாறும் அமைந்து செய்யுளைச் சிறக்கச் செய்கின்றன. செய்யுளுக்குக் கருத்து, உணர்ச்சி, கற்பனை, அழகிய வடிவம் ஆகிய நான்கும் இன்றியமையாதவை.

நரம்பு, தோல், தசை, எலும்பு, கொழுப்பு, குருதி முதலியவற்றால் உருவான உடலை யாக்கை என வழங்குகிறோம். அதுபோல எழுத்து, அசை, சீர், தளை, அடி,

தொடை என்னும் ஆறு உறுப்புகளால் உருவாக்கப்படுவது 'செய்யுள்' என வழங்குகிறோம்.

யாப்பு, செய்யுள், பாட்டு, தூக்கு, கவி என்பவை 'பா' என்னும் ஒரே பொருளை உணர்த்தும் சொற்களாகும். 'பா' நான்கு வகைப்படும். அவை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவாகும்.

- **வெண்பா**

வெண்பா என்பதற்குத் தூய்மையான 'பா' எனப் பொருள்படும். பாக்களுள் மிகுதியான இலக்கணக் கட்டுப்பாட்டைக் கொண்டது வெண்பா ஆகும். பாக்களுள் இதுவே முதன்மையானதாகும். ஒரு கருத்தை, ஒருவர் தன் முன்னே உள்ள மற்றொருவருக்கு எடுத்துச் செப்பும் (சொல்லும்) வகையில் வெண்பாக்கள் இயற்றப்பட்டுள்ளன. எனவே, இதன் ஓசை செப்பலோசையாகும். வெண்பா ஐந்து வகைப்படும். அவை, குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்பனவாகும்.

**வெண்பாவின் பொது இலக்கணம்**

- செய்யுளில் ஈற்றடி முச்சீராகவும், மற்ற அடிகள் நான்கு சீராக இருக்கும்.
- சீர்களுள் இயற்சீர், வெண்சீர் பெற்று வரும்.
- தளைகளுள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் மட்டுமே பெற்று வரும். பிற தளைகள் வாரா.
- செய்யுளின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று முடியும்.
- செப்பலோசை பெற்று வரும்.
- செய்யுளின் அடிகள் 2 முதல் 12 அடிகள் வரை வரும்.
- ஒரு விகற்பமாகவோ பல விகற்பமாகவோ வரும்.

**எ.கா :**

நெ**ல்**லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
பு**ல்**லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
ந**ல்**லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எ**ல்**லார்க்கும் பெய்யும் மழை – நேரிசை வெண்பா

- **ஆசிரியப்பா**

ஆசிரியப்பா அகவற்பா எனவும் அழைப்பர். மயில் அகவுவதைப் போல் பாடலின் ஓசை அமைவதால், அகவற்பா என அழைக்கப்படுகிறது. ஆசிரியப்பா நான்கு வகைப்படும். அவை நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என்பனவாகும்.

**ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்**

- நான்கு சீர் கொண்ட அளவடிகளைப் பெற்று வரும்.
- மாச்சீர் விளச்சீர் பெற்று வரும்.
- வஞ்சியுரிச்சீர்கள் வாரா
- ஆசிரியத் தளையும் பிறதளையும் கலந்து வரும்
- மூன்று அடி முதல் பல அடி வரை வரும்
- அகவலோசை பெற்று வரும்
- ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடியும்.
- நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா

**எ.கா :**

பாரி பாரி என்று பலஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன
மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே – நேரிசை ஆசிரியப்பா

- **கலிப்பா**

  - கலிப்பா துள்ளல் ஓசையைப் பெற்று வரும்
  - நான்கு சீர் உடைய, நான்கு அடி முதல் பல அடி வரை அமையப்பெறும்
  - வெண்சீர் மிகுதியாய் வரும்
  - மாச்சீரும், கூவிளங்கனியும், கருவிளங்கனியும் பெறாது
  - பிறசீர்கள் சிறுபான்மை கலந்து வரும்
  - தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், சுரிதகம், தனிச்சொல் என்னும் ஆறு உறுப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும்.
  - ஒத்தாழிசைக் கலிப்பா, கொச்சைக் கலிப்பா, வெண் கலிப்பா, உறழ் கலிப்பா எனக் கலிப்பா நான்கு வகைப்படும்.

**எ.கா :**

அரிதாய் அறனெய்தி அருளியோர்க்கு அளித்தலும்
பெரிதாய் பகைவென்று பேணாரைத் தெறுதலும்

புரிவமர் காதலின் புணர்ச்சியும் தரும் எனப்
பிரிவெண்ணில் பொருள்வயின் சென்ற நம் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பலயான் கோள்இனி,

- **வஞ்சிப்பா**
    - வஞ்சிப்பா தூங்கலோசை உடையது.
    - மூன்று அடி முதல் பல அடி வரை பாடப்படும்.
    - கனிச்சீரும் பிற சீர்களும் வரும்.
    - அடிகள் இருசீரும் முச்சீருமாய் அமையப் பெறும்.
    - வஞ்சித்தளையும் பிற தளையும் வரப்பெறும்.
    - வஞ்சிப்பா இருவகைப்படும். இரண்டு சீர்களைக் கொண்டது குறளடி வஞ்சிப்பா எனப்படும். மூன்று சீர்களை உடையது சிந்தடி வஞ்சிப்பா எனப்படும்.
    - வஞ்சித் தாழிசை, வஞ்சித் துறை, வஞ்சி விருத்தம் என்பன வஞ்சிப்பாவின் இனங்களாகும்.

**எ.கா :**

நானும்உனைப் போலேஇருந்
தேனேஒரு நாளில்என
உள்ளும்பொழு தென்றன்உள்ளம்
துள்ளும்களி கொள்ளும்

## 3.4 அணி

**அணி**

'அணி' என்னும் சொல்லுக்கு 'அழகு' என்பது பொருள். பெண்கள் விரும்பி அணியும் அணிகலன்கள் அழகாய் அமைவதுடன், தம்மை அணிபவருக்கு மேலும் அழகு தருதலின் அப்பெயர் பெற்றன. அதுபோலச் செய்யுளில் வரும் சொல்லும் பொருளும் அழகுற நின்று, செய்யுளை மேலும் அழகுபெறச் செய்வதால், அவை, அணி என வழங்கப் பெறுகின்றன.

செய்யுளில் வரும் அணிகள் செய்யுளுக்கு அழகு தருவதோடு, செய்யுளைக் கற்போரையும் அழகுணர்ச்சி பெறச் செய்கின்றன.

அணி, சொல்லணி, பொருளணி என இருவகைப்படும். யமகம், மடக்கு முதலான அணிகள் சொல்லணியின்பாற்படும். உவமை, உருவகம் முதலான அணிகள் பொருளணியின் பாற்படும்.

அவ்வணிகள் சிலவற்றை விளக்கமாகக் காண்போம்.

### 3.4.1 உவமையணி

ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமையணி எனப்படும்.

உவமையணியில்,

1. உவமை
2. உவமேயம் (உவமிக்கப்படும் பொருள்)
3. உவம உருபு
4. இரண்டுக்கும் உரிய பொதுத்தன்மை

என்னும் நான்கு பகுதிகள் இருக்கும்.

எ.கா :

**"பால்போலும் இன்சொல்"** – இவ்வடியில் இன்சொல்லிற்கு 'பால்' உவமையாக்கப்பட்டுள்ளது. பால் – உவமை, இன்சொல் – உவமேயம், போலும் – உவமஉருபு, இனிமை – பொதுத்தன்மை.

| | | | | |
|---|---|---|---|---|
| உவமை அணி | உவமை | உவம உருபு | உவமேயம் | பொதுத்தன்மை |
| | பால் | போலும் | இன்சொல் | இனிமை |

### 3.4.2 எடுத்துக்காட்டு உவமையணி

உவமானமும், உவமேயமும் தனித்தனியே நிற்க, அவற்றுக்கு இடையில், உவமஉருபு மறைந்து வருவது **எடுத்துக்காட்டு உவமையணி** ஆகும். உவம உருபை நாமே எடுத்துக்காட்டிக் கூறுதல் வேண்டும்.

எ.கா :

**புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை**
**வாய்மையாற் காணப் படும்.**

இக்குறட்பாவில், உவம உருபு மறைந்துள்ளது. (அது போல)

| எடுத்துக்காட்டு உவமையணி | உவமை / உவமானம் | உவமேயம் | உவமேயம் (பொருள்) |
|---|---|---|---|
| | புறந்தூய்மை நீரால் அமையும் | மறைந்து உள்ளது | அகந்தூய்மை வாய்மையால் காணப்படும் அமையும் |

### 3.4.3 இல்பொருள் உவமையணி

உலகத்தில் இல்லாத, நிகழாத, நிகழவியலாத பொருளை உவமையாக கூறுவது **"இல்பொருள் உவமையணி".**

எ.கா :

1. **"இமயம் எழுந்து நடந்ததுபோல"**
2. **"இருகை வேழத்து இராகவன் வந்தான்"**

இத்தொடர்களுள், "இமயம் எழுந்து நடத்தல்", "இருகை வேழம்" என்பன. இல்பொருள் என்பதை அறிக.

### 3.4.4 உருவக அணி

**உவமான**த்தையும், **உவமேய**த்தையும் வெவ்வேறாகக் கூறாமல், உவமானத்தின் தன்மையை உவமேயத்தில் ஏற்றிக் (உருவகப்படுத்திக்) கூறுவது **உருவக அணி** எனப்படும்.

எ.கா :

**"மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலையூன்றி"**

இப்பாடலடியில், மனம் தோணியாகவும் மதி ஊன்றுகோலாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளன.

### 3.4.5 ஏகதேச உருவகஅணி

உவமை, உவமிக்கப்படும் பொருள் இரண்டனுள், ஒன்றை உருவகம் செய்து, மற்றொன்றை உருவகம் செய்யாமல் விடுதல் **ஏகதேச உருவக அணி**யாகும்.

**எ.கா :**

> **"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீத்தார்**
> **இறைவனடி சேரா தார்".**

பிறவி, பெருங்கடலாக உருவகம் செய்யப் பெற்றுள்ளது. இறைவனது அடி, யாதொன்றாகவும் உருவகம் செய்யப்படவில்லை. எனவே, இஃது **ஏகதேச உருவகம்** ஆயிற்று.

### 3.4.6 இயல்பு நவிற்சி அணி

உள்ளதை உள்ளபடியே அழகுமிளிரக் கூறுவது இயல்பு **நவிற்சியணி** எனப்படும்.

**எ.கா :**

> **"தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே**
> **துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி**
> **அம்மா என்குது வெள்ளைப் பசு – உடன்**
> **அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி"**

இப்பாடல் அடிகளில், தாய்ப்பசுவும், அதன் கன்றும் கொஞ்சி விளையாடுவதை இயல்பாகக் காட்டியுள்ளார் கவிமணி. எனவே, இவ்வாறு வருவன, இயல்புநவிற்சி அணியின் பாற்படும்.

### 3.4.7 உயர்வுநவிற்சியணி

ஒரு பொருளின் சிறப்பினை, வியப்பு உண்டாகுமாறு உயர்த்திக் கூறுவது **உயர்வுநவிற்சி அணி** எனப்படும்.

**எ.கா :**

1. **"விண்ணை இடிக்கும் தலை இமயம்"**
2. **"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
3. **மந்திசிந்தும் கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"**

இவைபோல்வன, உயர்வுநவிற்சிக்குச் சிறந்த சான்றுகளாகும்.

### 3.4.8 வேற்றுமையணி

செய்யுளில், முதற்கண் இரு பொருள்களுக்கு ஒப்புமை கூறிப் பின்னர், ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் கூறுவது, **வேற்றுமையணி** எனப்படும்.

**எ.கா :**

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினால் சுட்ட வடு.**

இக்குறட்பாவில் சுடுகின்ற தன்மையில் நாக்கும், தீயும் ஒரே தன்மையன என்று ஒன்றுபடுத்திக்கூறி, தீயினால் சுட்டது ஆறிவிடும். நாவினால் சுட்டது ஆறாது என வேற்றுமைப்படக் கூறப்பட்டுள்ளதால் இது வேற்றுமையணியாகும்.

### 3.4.9 இரட்டுறமொழிதலணி (இரண்டு + உற + மொழிதல் + அணி)

ஒரு சொல்லையோ, சொற்றொடரையோ இரண்டு பொருள் தருமாறு கூறுவது **இரட்டுறமொழிதல் அணி** ஆகும்.

இதனைச் **சிலேடையணி** எனவும் கூறுவர். இது, **செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச்சிலேடை** என இரண்டு வகைப்படும்.

ஒரு சொல்லை, அப்படியே வைத்து இருபொருள் காண்பத செம்மொழிச்சிலேடை ஆகும்.

சொல்லைப் பிரித்து இருபொருள் காண்பது பிரிமொழிச் சிலேடை ஆகும்.

**எ.கா :**

**"செய்யுட் கிடைமறிக்கும் சேர்பலகை யிட்டுமுட்டும்**
**ஐயமற மேற்றா ளடர்க்குமே – துய்யநிலை**
**தேடும் புகழ்சேர் திருமலைரா யன்வரையில்**
**ஆடும் கதவுநிக ராம்"**

இப்பாடல், ஆடு, கதவு இரண்டனுக்கும் பொருந்துமாறு பாடப்பட்டுள்ளது.

செய் + உள் + கிடை
செய் + உட்கு + இடை
ஆள் + அடர்க்கும்

தாள் + அடர்க்கும்

பலகை, பல + கை

இவ்வாறு சொற்றொடர்கள் இருபொருள் படவரும்.

(இச்செய்யுளில் உள்ள, செய்யுட் கிடை மறிக்கும், பலகை, மேற்றாள் – ஆகிய சொற்கள் தனித்து நின்றும் பிரிந்து நின்றும் பொருள் தருவதால், இப்பாடல் செம்மொழிச்சிலேடை, பிரிமொழிச்சிலேடை இரண்டற்கும் பொருந்துகிறது.)

### 3.4.10 பிறிதுமொழிதலணி

உவமானத்தைக்கூறி, அதன்மூலம் உவமேயத்தை உணர வைப்பது, பிறிதுமொழிதல் அணி ஆகும்.

**எ.கா :**

**பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்.**

ஒன்றன் வலிமையை அறிந்து செயல்படுதல் நன்றாம். வலிமை அறியாது செயல்படுதல் துன்பம் தரும் என்பதைச் சொல்லவந்த, வள்ளுவப் பெருந்தகை, மிகவும் எடை குறைவான மயிற்றோகை (பீலி)யாக இருந்தாலும், வண்டி எவ்வளவு கொள்ளுமோ, அவ்வளவே அதில் ஏற்றவேண்டும். மிகுதியாக ஏற்றினால் அவ்வண்டியின் அச்சுமுறிந்துவிடும் எனக் கூறுகிறார். இவ்வாறு, வருவது பிறிது மொழிதல் அணியாகும்.

### 3.4.11 நிரல்நிறையணி

ஒரு சொல்லையும், அதன் பொருளையும் நிரலாக நிறுத்தி வரிசையாக பொருள்கொள்வது **நிரல்நிறை அணி**யாகும்.

**எ.கா :**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது.**

இல்வாழ்க்கையின் பண்பு எனப்படுவது அன்புகாட்டுவது. பயன் எனப்படுவது, அறம் செய்தல் என்பதாகும் என்பது இக்குறட்பாவின் கருத்தாகும்.

அதற்கேற்ப, அன்பும் அறனும் குறட்பாவின் முதல் அடியில் அமைந்துள்ளன. அடுத்த அடியில், அச்சொற்களோடு முறையாகப் பொருந்தும் வரிசைப்படி பண்பு, பயன் என்னும் சொற்கள் அமைந்துள்ளன. எனவே, இது, நிரல்நிரை அணி ஆகும்.

பாடல் அமைந்துள்ள முறையில், நேர்நிரல்நிறை, எதிர்நிரல்நிறை என்றும் கூறுவர்.

### 3.4.12 வேற்றுமைப்பொருள்வைப்பு அணி

புலவர் ஒருவர் தாம் கூறவந்த சிறப்புப் பொருளை வலியுறுத்த, உலகம் அறிந்த பொதுப்பொருளைக் கூறுவது **வேற்றுப் பொருள் வைப்பு அணி**யாகும்.

**"வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்**
**தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்**
**ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்**
**ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே".**

இப்பாடலில் குரங்குக்கு, தூக்கணங்குருவி அறிவுரை சொன்ன கதை வந்துள்ளது.

"ஞானமும், கல்வியும், நவின்றநூல்களும், ஈனருக்கு உரைத்திடில் இடர் ஆகுமே" என்னும் சிறப்புப் பொருளை வலியுறுத்த, "வானரம் (குரங்கு) மழைதனில் நனையத் தூக்கணம் (தூக்கணங்குருவி) தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்ததே" என்னும் உலகமறிந்த கதை கூறப்பட்டுள்ளது. இவ்வாறு வருவது வேற்றுப்பொருள்வைப்பு அணி ஆகும்.

### 3.4.13 தற்குறிப்பேற்றணி (தன் + குறிப்பு + ஏற்றம் = தற்குறிப்பேற்றம்)

இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சியின் மீது, புலவர் தம் குறிப்பை ஏற்றி அழகுறப் பாடுவது, **தற்குறிப்பேற்ற அணி**யாகும்.

**"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**வாரல் என்ப போல் மறித்துக் கைகாட்ட" – சிலப்பதிகாரம்**

பாண்டியநாட்டுக் கோபுரத்தின் மேலுள்ள கொடிகள் இயல்பாக ஆடுவதைக் கண்ட இளங்கோவடிகள், "கோவலனையும் கண்ணகியையும் மதுரைக்கு வராதீர்"

எனக் கூறுவதுபோல் கொடி ஆடுவதாகத் தம் கருத்தை ஏற்றி உரைக்கிறார். இது தற்குறிப்பேற்ற அணியாம்.

### 3.4.14 வஞ்சப்புகழ்ச்சியணி

ஒன்றைப் புகழ்வதுபோல் பழிப்பதும், பழிப்பதுபோல் புகழ்வதுமாகப் பாடுவது வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

**எ.கா :**

**"பாரி பாரி என்று பலவேத்தி**
**ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்**
**பாரி ஒருவனும் அல்லன்**
**மாரியும் உண்டுஈண்டு உலகு புரப்பதுவே"**

இப்பாடலில், பாரிவள்ளல் இகழப்படுவதுபோலத் தோன்றினும், மழையைப் போல் கொடுக்கும் வள்ளல். இது, இகழ்வது போலப் புகழ்தலின் பாற்படும்.

**எ.கா :**

**"கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்"**

இக்குறட்பாவில், கல்வி கல்லாதவர்கள், கற்றார்முன் ஒன்றைச் சொல்திருப்பின் மிகவும் நல்லவரே என்ற கருத்து வந்துள்ளது. இங்கு, "கல்லாதவர் மிகவும் நல்லவர்" எனப் புகழ்வது போலக் கூறி, அவர்களைப் பழித்துக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் இது புகழ்வதுபோலப் பழித்தல் ஆகும்.

### 3.4.15 பின்வருநிலையணி

இது மூன்று வகைப்படும். அவை,

அ. சொல்பின்வருநிலை
ஆ. பொருள்பின்வருநிலை
இ. சொற்பொருட்பின்வருநிலை

என்பனவாகும்.

- **சொல்பின்வருநிலை**

ஒரு செய்யுளில், ஓரிடத்தில் வந்த சொல் மீண்டும் பல முறை வந்து, வெவ்வேறு பொருள் தருமாயின் அது, **சொல்பின்வருநிலை அணி**யாகும்.

எ.கா :

**பொருள் அல்லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருளல்லது இல்லை பொருள்**

இக்குறட்பாவில் பொருள் எனும் சொல் பல முறை வந்து, செல்வம், பொருட்டு, மதிப்பு என வேறுவேறு பொருள் தருகின்றது. எனவே, இது **சொல் பின்வருநிலை அணி** ஆகும்.

- **பொருள்பின்வருநிலை**

சொற்கள் வேறுவேறாக வந்து பொருள் ஒன்றாக அமையுமாறு பாடப்படுவது **பொருள்பின்வருநிலை அணி** எனப்படும்.

எ.கா :

**"அவிழ்ந்தன தோன்றி; அலர்ந்தன காயா;**
**நெகிழ்ந்தன நேர்முக முல்லை – மகிழ்ந்திதழ்**
**விண்டன கொன்றை; விரிந்தனகருவிளை**
**கொண்டன காந்தன் குலை".**

இப்பாடலில், அவிழ்ந்தன; அலர்ந்தன; நெகிழ்ந்தன; விண்டன; விரிந்தன; என வேறுவேறாக வந்துள்ள சொற்கள், மலர்ந்தன என்ற ஒரே பொருளைத் தந்துள்ளன; எனவே, இது பொருட்பின்வருநிலையணி ஆகும்.

- **சொற்பொருட் பின்வருநிலையணி**

ஒரு செய்யுளில் வந்தசொல்லே மீண்டும் மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தருவது **சொற்பொருட்பின்வருநிலை அணி** எனப்படும்.

**நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**
**வாய் நாடி வாய்ப்பச் செயல்**

இக்குறட்பாவில் 'நாடி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்துள்ளது. இது "ஆராய்ந்து" என்கிற ஒரேபொருளையே தந்து நிற்கிறது. எனவே, இது சொற்பொருட்பின்வருநிலை அணி ஆகும்.

## 3.5 சொல்லாட்சிப் பிறழ்வுகள்

### சொல்லாட்சிப் பிறழ்வுகள்

மொழியைத் திறம்படக் கையாளுவதில் தொடக்க நிலையிலிருந்தே சொல் நிலையிலும் சில இடர்ப்பாடுகள் எதிர்ப்படுகின்றன. அவ்விடர்ப்பாடுகளைப் பொருந்தாச் சொல்லாட்சி, வேற்றுச் சொல்லாட்சி என வகைப்படுத்திக் காணலாம்.

### 3.5.1 பொருந்தாச் சொல்லாட்சி

பொருத்தமற்ற சொல்லாட்சிகளைப் பலவாறாக வகைப்படுத்திக் காணலாம். அவற்றைப் பற்றிய ஆய்வுகள் வெகுவாக இல்லை. எனினும் இதழ்கள், மாணவர்களின் விடைத்தாள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க பொருந்தாச் சொல்லாட்சிக் குறைபாடுகளை வகைப்படுத்தலாம்.

சொற்களுக்குரிய பொருட்பாகுபாடு அறியாமலும் மரபாகப் பயன்படுத்தப்படும் சொற்கள் தெரியாமலும் தமிழ்ச் சொற்களைப் பிற மொழிச் சொற்களிலிருந்து பிரித்தறிய இயலாத நிலையிலும் பொருத்தமற்ற சொற்களை எடுத்தாண்டு குறைபாடுடைய மொழியினைப் பலர் பேசுகின்றனர்; எழுதுகின்றனர்.

- **பொருட்பாகுபாடு**

பல சொற்கள் ஏறத்தாழ ஒரே பொருளைத் தருவதாக அமையினும் அவற்றுள் நுட்பமான பொருள் வேறுபாடுகளைக் காண முடியும். இரண்டாம் மொழியாகக் கற்பவர்கள் இம்மாறுபாடுகளைப் புரிந்து கொள்ள இடர்படுவர்.

அவன் சொன்னான். (சொல்)
அவன் பேசினான். (பேசு)
அவன் கூறினான். (கூறு)

இந்த வாக்கியங்களில் பயின்றுள்ள 'சொல், பேசு, கூறு' ஆகிய வினைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறு பொருளை உடையனவாகும்.

சொல் – தகவலை வெளிப்படுத்தல்
(ஒருவர் மட்டுமே மொழிகின்ற நிலை)
பேசு – உரையாடு
(இருவர் பேசுதல் குறிப்பாக வெளிப்படுகிறது)

கூறு – வேண்டுதல் அல்லது விழைதல் போன்றன சொல்லுதலில் அமையும்.

சொற்களின் நுண்ணிய பொருள் வேறுபாடுகளை, அவற்றை வாக்கியத்தில் அமைத்துக் காட்டியே கற்பிக்க இயலும். எனவே பொருள்பாகுபாடுகளை வெளிப்படுத்தத் தக்கவாறான வாக்கியத் தொகுதிகளின் தயாரிப்பு கற்பித்தல் தேவையாகிறது.

- **மரபுச் சொல்**

பொருத்தமான சொல்லாட்சியில் கருதத்தக்க ஒன்று மரபுச் சொல்லாகும்.

ஒரே பொருளில் பல சொற்கள் இருப்பினும் சூழ்நிலையின் தன்மைக்கு ஏற்ப குறிப்பிட்ட சொல்லையே பயன்படுத்துவது மரபாக உள்ளது. 'உணவு' என்பது மாந்தர் சாப்பிடும் பொருள். விலங்குகள் சாப்பிடுவதை உணவு எனக் குறிப்பது மரபு அன்று. 'தீனி' என்றே குறித்தல் வேண்டும். பறவைகள் கொள்வது 'இரை' யாகும். எனவே உணவு, தீனி, இறை என்பன ஒரே பொருளைக் கொண்டிருந்தாலும் அவற்றை வெவ்வேறு நிலைகளில் பயன்படுத்துகிறோம்.

பெயர்சொற்களைப் போன்றே வினைச் சொற்களிலும் மரபுச் சொற்கள் உள்ளன. ஒலிகளைக் குறிக்க வெவ்வேறு வினைச் சொற்களைப் பயன்படுத்துதல் மரபாகும்.

'கொட்டு முழங்குகிறது', 'கடல் இரைகிறது', 'சிங்கம் கர்ச்சிக்கிறது', 'புலி உறுமுகிறது', 'காக்கை கரைகிறது', ' நாகம் சீறுகிறது', 'தவளை கத்துகிறது', 'வண்டு முரலுகிறது', 'குதிரை கனைக்கிறது', 'நாய் குரைக்கிறது' போன்ற வாக்கியங்களில் மரபாகப் பயன்படுத்தப்படும் வினைச்சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

- **தகுசொல்**

சில சொற்கள் அவற்றின் அமைப்பு முறையால் பிறவற்றிலிருந்து மாறுபட்டுள்ளன. 'ஒருவன்' என்னும் சொல்லில் 'அன்' விகுதி ஆண்பாலைக் குறிக்கும். எனவே பெண்பாலைக் குறிக்கும் 'அள்' விகுதி சேர்ந்த 'ஒருவள்' என்னும் சொல் இருத்தல் வேண்டும் எனக் கருதி, 'ஒருவன்' என்பதற்குப் பெண்பாலாக 'ஒருவள்' எனும் சொல்லை எடுத்தாளுகின்றனர். 'ஒருவள்' என்பது தவறான சொல்லாட்சியாகும். 'ஒருத்தி' என்பதே முறையான சொல்லாட்சி.

வழக்கில் காணப்படுகின்ற சில பிழைபட்ட சொல்லாட்சிகளைக் கீழ்வரும் அட்டவணை காட்டுகிறது.

| எண் | தவறான சொல்லாட்சி | முறையான சொல்லாட்சி |
|---|---|---|
| 1. | கண்ணன் என்ற பெயரினன் | கண்ணன் எனும் ... |
| 2. | அவள் சிறுவள் | அவள் சிறுமி |
| 3. | அவைகளை | அவற்றை |
| 4. | மகன்கள், மகள்கள் | ஆண் மக்கள், பெண் மக்கள் |
| 5. | தண்ணீர்கள் | தண்ணீர் |
| 6. | நட்புக்கள் | நட்பு |

### 3.5.2 வேற்றுச் சொல்லாட்சி

ஒரு மொழியில் பிறிதொரு மொழியின் சொற்கள் கலப்பதைத் தவிர்க்க இயலாது. பல்வேறு இணைப்புகளால் உலகம் சுருங்கிவரும் இந்நாளில், மொழிக்கலப்பு விரைவாக ஏற்படும். எனினும், தமிழ் அறிஞர்களில் பலர் தமிழில் பிறமொழி கலப்பதைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். அவர்களுடைய எதிர்ப்புக்கு மொழியின் தனித்தன்மை காத்தல், மொழியினை வளப்படுத்துதல் ஆகியன காரணங்களாக அறியப்படுகின்றன.

- **தனித்தன்மை காத்தல்**

தமிழகத்தில் ஏற்பட்ட சமயக்கலப்பு தமிழ்மொழியைப் பெரிதும் தாக்கியது. சமஸ்கிருதத்தைச் சார்ந்தே தமிழ் இலக்கியங்கள் கருதப்பட்டன. இலக்கிய வகைகளும் இலக்கண நெறிகளும் தமிழில் புகுத்தப்பட்டன. 'சமஸ்கிருதமின்றித் தமிழில்லை' எனும் தவறான கருத்து வேரூன்றத் தொடங்கியது. தமிழுக்கு நேர்ந்த இழிநிலை உணரப்பட்டபோது தனித்தமிழ் இயக்கம் தோன்றியது. அவ்வியக்கத்தால் மீண்டும் தனித்தமிழ் ஆட்சி மலர்ந்தது. திராவிட இயக்கங்கள் அரசியல் மேன்மை பெற்றபோது தனித்தமிழ் ஆட்சி மேலும் பெருமை பெற்றது. எனினும் 'உதட்டளவில் தமிழ், உள்ளத்தளவில் சமஸ்கிருதம்' எனும் நிலையினையும் காணமுடிகிறது. 'மொழி வளர்ச்சி' எனும் போர்வையில் தமிழில் சமஸ்கிருதச் சொற்களைப் பலர் பயன்படுத்துகின்றனர்.

தமிழில் சமஸ்கிருதச் சொற்கள் கலக்கப்பட்டதால் மொழிக்கு வளர்ச்சியைவிடத் தாழ்ச்சியே பெரிதும் ஏற்பட்டதை வரலாறு உணர்த்துகிறது. எனவே சமஸ்கிருதச் சொற்களைக் களைந்து, தூய தமிழ்ச் சொல்லாட்சிக்கு

முனைப்புக் காட்ட வேண்டும். தமிழ்ப் பாடநூல்களாவது சமஸ்கிருதக் கலப்பற்று எழுதப்படல் வேண்டும். தவிர்க்க இயலாச் சூழலில் சமஸ்கிருதச் சொல்லாட்சி பாடநூல்களில் மேற்கொள்ளப்படின் அச்சொற்களை ஆசிரியர்கள் எடுத்துக்காட்டி அவற்றிற்கான தூய தமிழ்ச் சொற்களை உருவாக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

- **வளப்படுத்துதல்**

தமிழுக்கு நேர்ந்த தாழ்வினைப் போக்கும் நோக்கில்தான் சமஸ்கிருதக் கலப்பு எதிர்க்கப்பட்டது; எதிர்க்கப்படுகிறது. தொன்மையான தமிழ்மொழி நாளும் தோன்றி வளர்ந்து வரும் பொருள்களையும் பொருண்மைகளையும் குறிப்பதற்குத் தகுந்தவாறு சொற்களைப் பெருக்கி வளம்பெற வேண்டும். எனவே ஆங்கிலக் கலைச்சொற்கள் நல்ல தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுத் தூய தமிழ்ச் சொல்லாட்சி வளம் பெற விரும்பப்படுகிறது. கலைச் சொல்லாக்கம் 'தமிழால் முடியும்' எனும் நிலையினை உருவாக்கும்.

புதிய கலைச்சொற்கள் படிப்பவர்களுக்குப் புரியாது எனக் கூறி சிலர் ஆங்கிலத்திலுள்ள கலைச்சொற்களை ஒலிபெயர்ப்பாகப் பயன்படுத்துமாறு கூறுகின்றனர். அவர்களின் கூற்று தவறுடையதாகும். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை 'வரலாறு, நிலநூல்' போன்ற தூய தமிழ்ச்சொல் வழக்கு இல்லை. ஆனால் இன்றைய நிலை வேறு. சரித்திரம், பூகோளம் எனும் பிறமொழிச் சாயல் கொண்ட சொற்கள் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்குப் புரியாது. வரலாறு, நிலநூல் போன்ற தூய தமிழ்ச் சொற்களையே அவர்கள் அறிவர்.

நடைமுறை வாழ்க்கையிலும் தொடக்க காலத்தில் தூய தமிழ்க் கலைச்சொற்கள் விளங்கா நிலை ஏற்படலாம். ஆனால் சொற்கள் பழக்கத்தில் வந்தபின்னர் பாமரருக்கும் விளங்கும் சொல்லாகிவிடும். கவர்னர், கலெக்டர் போன்ற ஆங்கிலச் சொற்கள் இன்று வழக்கிழந்து ஆளுநர், மாவட்ட ஆட்சியர் போன்ற தூய தமிழ்ச் சொற்கள் நடைமுறைக்கு வந்துவிட்டன. எனவே தனித்தமிழ் ஆக்கங்களை நடைமுறைப் படுத்தும்போது தொடக்க நிலையில் 'விளங்காத சொற்கள்' எனும் குரல் எழலாம். போகப் போகப் புரியும் நிலை ஏற்படும். எனவே தமிழாசிரியர்களும் தமிழறிஞர்களும் தனித்தமிழ் ஆக்கத்திற்கு ஊக்கமளித்து ஆக்கப் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

தொடக்க நிலையில், குழந்தைகள் ஆங்கிலம் அல்லது பிறமொழிக் கலைச்சொற்களை எதிர்ப்படும்போது அவற்றிற்கான தூய தமிழ்ச்சொற்களையும்

கற்பிக்க வேண்டும். தூய தமிழ்ச் சொற்கள் இல்லாத நிலையில் விளக்கங்கள் தந்து சொல்லாக்கங்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

கவிதை, கதை போன்றவை தோன்றிப் பெருகுவதனால் மட்டுமே தமிழ் வளம் பெற்றுவிட்டதாகக் கருதக் கூடாது. எல்லாப் பொருள்களையும் பொருண்மைகளையும் வெளிப்படுத்தி விளக்கத் தக்கவாறு மொழியில் சொல் வளம் பெறுக வேண்டும். சொல்வளத்தைப் பெருக்குதல் தமிழ் வளர்ச்சியில் எதிர்கொள்ள வேண்டிய இன்றியமையாப் பணியாகும்.

## 3.6 தொகுப்புரை

### தொகுப்புரை

இவ்வலகில் அகத்திணைகள், புறத்திணைகள், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் மற்றும் சொல்லாட்சிப் பிறழ்வுகள் ஆகியவை தக்க சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன. மொழியினைக் கற்பித்தலில் ஈடுபடும் மாணவ ஆசிரியருக்கு தமிழ் இலக்கண, இலக்கியங்களை அறிதல் மிகவும் இன்றியாமையாதது ஆகும்.

| **தன் மதிப்பீடு : வினாக்கள் – II** |
|---|
| 1. யாப்பின் உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? |
| 2. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை? |
| 3. ஈரசைச் சீரின் வேறு பெயர்கள் யாவை? |
| 4. தளை என்றால் என்ன? எத்தனை வகைப்படும்? |
| 5. நிரையொன்றாசிரியத்தளை என்றால் என்ன? |
| 6. தொடை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை? |
| 7. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை? |
| 8. ஆசிரியப்பாவின் இலக்கணத்தைக் கூறுக. |
| 9. அணி என்றால் என்ன? அதன் வகைகளைக் கூறுக. |
| 10. உவமையணி எடுத்துக்காட்டு தந்து விளக்குக. |